பக்கங்கள்: 05

THEEMPUNAL
# தீம்புனல்
மாலைப் பதிப்பு

theempunaldaily@gmail.com தீ : 01 புனல்:65 06.02.2024 செவ்வாய்க்கிழமை வள்ளுவர் ஆண்டு 2054




## கெஹலிய ரம்புக்வெல்ல இராஜினாமா



சுற்றாடல் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தனது இராஜினாமாக் கடிதத்தை இன்று (6.2.2024) ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தரமற்ற மனித இம்யூனோகுளோபுலின் சம்பவம் தொடர்பில், கைது செய்யப்பட்ட கெஹலிய ரம்புக்வெல்லவை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மாளிகாகந்த நீதவான் நீதிமன்றம் அண்மையில் உத்தரவிட்டுள்ளது.

## சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு எதிர்க்கட்சிகள் ஆதரவு



சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிராக கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்க பல எதிர்க்கட்சி அரசியல் குழுக்களும் இணக்கம் தெரிவித்துள்ளன.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கப் போவதாக 'சுதந்திர மக்கள் சபை' அறிவித்துள்ளது.

நம்பிக்கையில்லாப் பிரேரணையை வெற்றியடையச் செய்வதற்கு எதிர்க்கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என சுதந்திர மக்கள் சபையின் மூத்த பிரதிநிதி பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்திருந்தார். இணையத்தள பாதுகாப்பு சட்டமூலத்தில் சபாநாயகர் கையொப்பமிட்டமை முற்றிலும் தவறானது எனவும் அதனால் சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வரவுள்ளதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச அண்மையில் தெரிவித்திருந்தார்.

சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வருவது குறித்து கட்சி அதிகாரபூர்வமாக தீர்மானிக்கவில்லை எனவும், எதிர்க்கட்சியின் அநேக பாராளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகரின் செயற்பாடுகள் குறித்து அதிருப்திக்கு உள்ளாகியுள்ளதாகவும் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

சமீபத்தில், இது குறித்து கருத்து தெரிவித்த எதிர்க்கட்சி எம்.பிக்கள் பலர், அரசியல் சாசனத்துக்கும், உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கும் எதிராக இந்த சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்திருந்தார்.

## தெற்கு சூடானுக்கு புறப்பட்டது இலங்கை இராணுவம்



இலங்கை இராணுவ மருத்துவப் படையின் (SLAMC) 10 ஆவது குழுவானது, தென் சூடானில் உள்ள ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் பணியிலுள்ள (UNMISS) நிலை-2 SRIMED மருத்துவமனையில்கடமைகளைப்பொறுப்பேற்க இன்று (06 பெப்ரவரி) அதிகாலை இலங்கை புறப்பட்டுச் சென்றது.

லெப்டினன்ட் கேணல் டி.எம்.டி.ஜே.திசாநாயக்க ஆர்.எஸ்.பி, யு.எஸ்.பி, இரண்டாவது கட்டளைத் தளபதி மேஜர் என்.ஐ.ரத்நாயக்க தலைமையில் 10 ஆவது தெற்கு சூடானுக்குச் செல்லும் குழுவில் 14 இராணுவ அதிகாரிகள், 01 கடற்படை அதிகாரிகள் மற்றும் 49 மற்ற அணிகள் உட்பட 64 இராணுவ வீரர்கள் உள்ளனர்.

இராணுவத் தளபதி, மேஜர் ஜெனரல் பி.ஏ.சி பெர்னாண்டோ யு.எஸ்.பி, கர்னல் கமாண்டன்ட், SLAMC மற்றும் பணிப்பாளர் நாயகம் இராணுவ சுகாதார சேவைகள், பிரிகேடியர் GLSW லியனகே USP psc, பணிப்பாளர், வெளிநாட்டு நடவடிக்கை இயக்குனரகம், பிரிகேடியர் WAUS வனசேகர RWP USP, சென்டர் கமாண்டன்ட் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் அதிகாரிகள் குழுவினரிடம் விடைபெற்றனர்.

## பல்கலைக்கழக மாணவனை கைது செய்ய உத்தரவு

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை பொலிஸார் தாக்கியதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவனை உடனடியாக கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு யாழ்ப்பாணம் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு கட்டளையிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், போதைப்பொருளுக்கு அடிமையான அவரை நீதிமன்றின் ஊடாக மறுவாழ்வு முகாமுக்கு அனுப்புமாறும், அந்த மாணவன் பாடசாலை மாணவிகளுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் வகையில் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்றமை தொடர்பில் ஆசிரியர்கள், மாணவிகளின் வாக்குமூலத்தைப் பதிவு செய்து நீதிமன்றில் தாக்கல் செய்யுமாறும் அவர் பணித்துள்ளார்.

வட்டுக்கோட்டை பொலிஸார் தன்னை போக்குவரத்து விதி மீறியதாக வழிமறித்து வீதியில் வைத்து தாக்கியதுடன், பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றும் தாக்கினார்கள் என்று நேற்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகத்தில் பல்கலைக்கழக மாணவன் முறைப்பாடு வழங்கியிருந்தார்.

## ரம்ழானில் அரசு ஊழியர்களின் பணி நேரங்களில் மாற்றம்

ரம்ழானில் முஸ்லிம் அரச ஊழியர்கள் சமய வழிபாடுகளை மேற்கொள்வதற்கான பணி அட்டவணையை ஏற்பாடு செய்யுமாறு அரச நிறுவனங்களுக்கு பொது நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது.

அமைச்சின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சட்டபூர்வ சபைகளுக்கு சுற்றறிக்கை ஒன்றை விடுத்து இது தொடர்பான அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் மாத்திரமே விசேட விடுமுறைக்கு அனுமதி வழங்கப்பட வேண்டுமென பொது நிர்வாக அமைச்சு வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## களுத்துறையில் பாணின் விலை அதிகரிப்பு



பேக்கரிகளில் எடைக் குறைவான பாண் விற்பனையை இலக்காகக் கொண்டு சோதனைகளை ஆரம்பிக்க தீர்மானித்ததை அடுத்து, களுத்துறை மாவட்டத்தில் உள்ள பேக்கரி உரிமையாளர்கள் ஒரு பாணின் விலையை அதிகரிக்க தீர்மானித்துள்ளனர்.

நுகர்வோர் விவகார அதிகாரசபை நேற்று முதல் பேக்கரிகளில் எடை குறைந்த பாண் விற்பனையை இலக்காகக் கொண்டு சோதனைகளை ஆரம்பித்தது.

# 50 நாட்களில் 56,000 சந்தேக நபர்கள் கைது

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையான யுக்தியாவின் ஒரு பகுதியாக கடந்த வருடம் டிசம்பர் 17 ஆம் திகதி முதல் 50 நாள் காலப் பகுதியில் 56,541 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த எண்ணிக்கையில் 49,558 சந்தேக நபர்கள் போதைப்பொருள் தொடர்பான குற்றங்கள் தொடர்பாகவும், 6,983 நபர்கள் பல்வேறு குற்றச் செயல்களுக்காகவும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

போதைப்பொருள் குற்றங்களுக்காக கைது செய்யப்பட்ட 49,558 சந்தேக நபர்களில், 1,817 நபர்கள் தடுப்பு உத்தரவுகளின் கீழ் மேலதிக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர், மேலும் 1,981 போதைக்கு அடிமையானவர்கள் புனர்வாழ்விற்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் 234 பேரிடம் சட்டவிரோத சொத்துகள் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் பட்டியலிடப்பட்ட 3,083 நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

# 1300 வைத்தியர்கள் விரைவில் நியமனம்

நாட்டின் அரச வைத்தியசாலைகளில் காணப்படும் வைத்தியர் பற்றாக்குறைக்கு தீர்வாக எதிர்வரும் மார்ச் மாதம் மேலும் 1300 வைத்தியர்கள் நியமிக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, கடந்த வாரம் பயிற்சிகளை நிறைவு செய்த 90 மருத்துவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் வைத்தியர்களின் பற்றாக்குறைக்கு தீர்வு காணப்படும் என குறிப்பிட்டார்.



“அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்”
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
theempunaldaily@gmail.com
தீம்புனல் THEEMPUNAL

# 1990 சுவா செரிய
## அம்புலன்ஸ் சாரதிகள் பற்றாக்குறை

அம்புலன்ஸ் சாரதிகளும் தாதியர்களும் வெளிநாட்டுக்குச் செல்வதால் அம்புலன்ஸ் சேவை பாதிப்படைந்துள்ளது. அம்புலன்ஸ் சாரதிகளுக்கும் தாதியர்களுக்கும் வெளிநாட்டில் கிராக்கி இருப்பதால் பலர் நாட்டை விட்டு வெளியேறிவிட்டனர். 1990 சுவா செரிய அம்புலன்ஸ் சேவையால் வழங்கப்படும் சேவை சான்றிதழுக்கு வெளிநாடுகளில் அதிக மதிப்பு இருப்பதால் செரிய அம்புலன்ஸ் சேவையில் பணியாற்றும் சாரதிகளும் தாதியரும் நாட்டை விட்டு வெளியேறுவது அதிகரித்துள்ளது. சாரதிகள், தாதியர் பற்றாக்குறையால் 60 வீதமான அம்புலன்ஸ்கள் இயங்கவில்லை.

கொழும்பில் உள்ள 21 அம்புலன்ஸ்களில் 8 அம்புலன்ஸ்கள் மட்டுமே சேவையில் ஈடுபடுகின்றன. 1990 சுவா செரிய அறக்கட்டளையில் 800க்கும் மேற்பட்ட பணியாளர்கள் பற்றாக்குறை இருப்பதாகவும், குறிப்பாக சாரதிகளுக்கு 350க்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் தெரியவருகிறது. ஊழியர்களின் எண்ணிக்கை 1,192 ஆக இருப்பதால் சுவ செரிய அறக்கட்டளை வழங்கும் சேவைகளின் தொடர்ச்சிக்கு சவாலாக உள்ளது.

சுவா செரிய அறக்கட்டளையின் செயற்பாடுகளுக்காக மேற்கொள்ளப்பட்ட தொடர் செலவீனங்களை அரசாங்கம் மீள வழங்கவில்லை. ஆனால் 330 மில்லியன் ரூபா 2022 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி வரை திருப்பிச் செலுத்தப்படவில்லை.

1990 ஆம் ஆண்டு நிதி குத்தகை முறை மூலம் பெறப்பட்ட 25 அம்புலன்ஸ்கள், பயன்படுத்தப்படாமல் ஒன்றரை ஆண்டுகளுக்கும் மேலாக சப்ளையர் இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. சுவா செரிய அறக்கட்டளை வழங்கும் சேவைகளுடன் சீரமைக்க தேவையான முழுமையற்ற உட்கட்டமைப்பு மேம்பாடுகள் இதற்கு காரணம் எனக் கூறப்படுகிறது.

இதற்கிடையில், 2019 ஆகஸ்ட் 27 அன்று, சுவா செரிய அறக்கட்டளைக்கு சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டை 2021 இல் 25 சதவீதமாகவும், 2022 இல் 50 சதவீதமாகவும், 2023 இல் 75 சதவீதமாகவும் குறைக்க அமைச்சரவை தீர்மானித்தது. நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட்-19 நெருக்கடியின் போது மக்களுக்கு வழங்கப்பட்ட சேவையை கருத்தில் கொண்டு, உரிய அமைச்சரவை தீர்மானத்தை மாற்றி நிதி வழங்குமாறு சுவா செரிய நிர்வாகம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கருவூலத்தில் வரவு செலவு பற்றாக்குறை காரணமாக, ஜனவரி 2023க்குள், 1990 சுவா செரிய அம்புலன்ஸ் சேவையை ஆதரிப்பதற்கும் பராமரிப்பதற்கும் பெருநிறுவன மற்றும் பொது உதவியைப் பெற மேலாண்மை வாரியம் முடிவு செய்தது. இதுவரை காலமும் அரசாங்க வரவு செலவுத்திட்டத்தினால் பேணப்பட்டு வந்த சுவா செரிய அம்புலன்ஸ் சேவையை பராமரிப்பது சிரமமாகியுள்ளதாகவும், அரசாங்கம் இது தொடர்பில் கவனம் செலுத்தாவிடின் சுவப செரிய சேவையை முற்றாக நிறுத்த வேண்டிய நிலை ஏற்படலாம். 2016 இல் நிறுவப்பட்ட சுவா செரிய அறக்கட்டளையின் நோக்கம் விபத்துகள், நோய்கள் மற்றும் அவசர நிலைகளைத் தடுப்பது, அவசரகால சூழ்நிலைகளுக்கு விரைவாகவும் திறம்படமாகவும் பதிலளிப்பது, நோய் மற்றும் காயத்தைத் தொடர்ந்து தனிநபர்களின் மறுவாழ்வுக்கு உதவுவதாகும்.

1990 ஆம் ஆண்டுக்கான அம்புலன்ஸ் சேவையானது இந்தியக் குடியரசின் அரசாங்கத்தின் தாராளமான ஆதரவுடன் 27 ஜூலை 2016 அன்று அம்பாந்தோட்டையில் ஆரம்பிக்கப்பட்டது. இது தொடர்பில் பொறுப்பான தரப்பினருடன் கலந்தாலோசித்து நிறுவனத்தை தடையின்றி நடத்துவதற்கு பொருத்தமான பொறிமுறையொன்று உடனடியாக ஏற்படுத்தப்பட வேண்டுமென சுவா செரிய அறக்கட்டளையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# எல் சல்வடோர் ஜனாதிபதித் தேர்தலில் நயீப் புகேலே வெற்றி



மத்திய அமெரிக்க நாடான எல் சல்வடோர் ஜனாதிபதித் தேர்தலில் நயீப் புகேலே மீண்டும் வெற்றி பெற்றுள்ளார்.

திங்கட்கிழமை காலை தற்காலிக முடிவுகள் 70% வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில் 83 % ஆதரவை புகேலே பெற்றார். உத்தியோகபூர்வ முடிவுகள் அறிவிக்கப்படுவதற்கு முன்பு புகேலே தன்னை வெற்றியாளராக அறிவித்தார், 85% க்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றதாகக் கூறினார்.

புகேலின் ஆயிரக்கணக்கான ஆதரவாளர்கள் சியான் நீலம் அணிந்து கொடிகளை அசைத்து சான்சால் வடாரின் மத்திய சதுக் கத்தில் அவரது வெற்றியைக் கொண்டாடினர்.

# 10 ஆண்டுகளாக ஐ.எஸ் பிடியில் இருந்த பெண் மீட்பு



சிரியாவில் உள்ள அமெரிக்க ஆதரவுடைய குர்திஷ் போராளிகள், ஒரு தசாப்த காலமாக இஸ்லாமிய அரசால் (IS) தடுத்து வைக்கப்பட்டிருந்த யாசிதி பெண்ணை விடுவித்துள்ளனர் அங்கு அவர் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு, தீவிரவாதிகளை திருமணம் செய்து கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

பல்லாயிரக்கணக்கான மக்கள் வசிக்கும் சிரியாவின் அல்-ஹவ்ல் முகாமில் குர்திஷ் போராளிகளின் பாதுகாப்பு நடவடிக்கையின் போது 24 வயதான பெண் தனது மகன் மற்றும் மகளுடன் மீட்கப்பட்டார்.

2014 ஆம் ஆண்டு தீவிரவாதிகள் நடத்திய படுகொலைகளின் போது, ஆயிரக்கணக்கான ஆண்களைக் கொன்று பல பெண்களையும் டீன் ஏஜ் சிறுமிகளையும் பாலியல் அடிமைகளாகக் கடத்தியபோது, ஐ.எஸ் போராளிகளால் அந்தப் பெண் கடத்தப்பட்டதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# பாகிஸ்தான் பொலிஸ் நிலையம் மீது தாக்குதல்: 10 பேர் பலி, 6 பேர் காயம்

பாகிஸ்தானின் தேரா இஸ்மாயில் கானில் உள்ள சோட்வான் காவல் நிலையத்தில் இன்று அதிகாலை நடந்த பயங்கரவாத தாக்குதலில் 10 பொலிஸ் அதிகாரிகள் கொல்லபட்டனர் மற்றும் 6 பேர் காயமடைந்தனர்.

பெப்ரவரி 8 ஆம் திகதி பாகிஸ்தானில் தேசியத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், அதற்கு மூன்று நாட்களுக்கு முன்பு இந்த தாக்குதல் நடந்துள்ளது.

“அதிகாலை 3 மணியளவில், தீவிரவாதிகள் ஸ்னைப்பர்கள் துப்பாக்கியால் காவல் நிலையத்தைத் தாக்கினர், பின்னர் கட்டடத்திற்குள் நுழைந்தனர்” என்று பாகிஸ்தானின் காவல்துறை அதிகாரிகளை மேற்கோள்காட்டி செய்தி நிறுவனம் ராய்ட்டர்ஸ் தெரிவித்துள்ளது.



கைபர் பக்துன்க்வா பகுதி, பலுசிஸ்தானில் கடந்த சில நாட்களாக தீவிரவாத தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# உக்ரைனில் பிறந்த மிஸ் ஜப்பான், பட்டம் பறிக்கப்பட்டது

2024 ஆம் ஆண்டுக்கான மிஸ் ஜப்பான் அழகிப் போட்டியை வென்ற ஜப்பானிய குடியுரிமையுடன் உக்ரைனில் பிறந்த மாடல் அழகி பட்டம் பறிக்கப் பட்டதாக அமைப்பாளர்கள் திங்கட்கிழமை தெரிவித்தனர்.




கரோலினா ஷினோ, (24) 2024 ஆம் ஆண்டுக்கான மிஸ் ஜப்பான் கிராண்ட் பிரிக்ஸ் வெற்றியாளராக ஜனவரி 22 ஆம் திகதி தேர்ந்தெடுக்கப்பட்டார். போட்டி அமைப்பாளர்கள் “அனைத்து ஜப்பானியர்களின் முதன்மையான அழகியின் பிரதிநிதித்துவத்திற்கு மகுடம் சூடுவதற்கு அர்ப்பணிப்புடன் அர்ப்பணிக்கப்பட்டவர்” என்று போட்டி அமைப்பாளர்கள் கூறும் போது ஐரோப்பிய வம்சாவளியைச் சேர்ந்த முதல் நபர் ஆவார்.

அவரது மிஸ் ஜப்பான் வெற்றி அவரது வெளிநாட்டு வேர்கள் காரணமாக ஏற்கெனவே சர்ச்சைக்குரியதாகக் கருதப்பட்டது. ஆனால் வியாழன் அன்று ஷூகன் புன்ஷூன் வார இதழில் பிரசுரமான கட்டுரையைத் தொடர்ந்து அவரது பட்டம் பறிக்கப்பட்டது.

## சனத் நிஷாந்தவின் சாரதிக்கு பிணை

கட்டுநாயக்க கொழும்பு அதிவேக வீதியில் இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் சாரதி பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

வெலிசர நீதவான் நீதிமன்றில் சாரதி ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் 5 லட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். இந்த விபத்தில் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவும் பாதுகாப்பு அதிகாரியும் உயிரிழந்தனர்.

## ஜனாதிபதியின் வீடு எரிப்பு ஒருவர் கைது



கொள்ளுப்பிட்டியில் ஜனாதிபதியின் தனிப்பட்ட இல்லம் எரிக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் பொரலஸ்கமுவைச் சேர்ந்த 46 வயதுடைய ஆசிரியர் ஒருவரை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தனியார் மேலதிக வகுப்புகளை நடத்தும் ஆசிரியர் என தெரியவந்துள்ளது.

## செவித்திறன் குறைபாடுள்ளவர்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரம்

செவித்திறன் குறைபாடு உள்ளவர்களுக்கு இலகுரக வாகன சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நவம்பர் 14, 2022 அன்று அமைச்சரவை தீர்மானத்தின்படி, கம்பஹா மாவட்டத்தை மையமாகக் கொண்டு முன்னோடித் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

இதன்படி, இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் தலைமையிலான குழுவின் பரிந்துரைகளின் பேரில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

## சபாநாயகருக்கு பரிசளிக்கப்பட்ட ட்ரகன் சிலை



இலங்கைக்கான சீன பிரதித் தூதுவர் ஸூயன் வெய், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை அண்மையில் பாராளுமன்றத்தில் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பில் குழுக்களின் பிரதித் தவிசாளர் கௌரவ அங்கஜன் இராமநாதன், பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர, பாராளுமன்ற உதவிச் செயலாளர் ஹன்ஸ அபேரத்ன இலங்கைக்கான சீன தூதரகத்தின் அரசியல் பிரிவின் தலைவர் கிவின் லிகொங் ஆகியோர் கலந்துகொண்டார்.

பெப்ரவரி 10 ஆம் திகதிக்கு இடம்பெறவுள்ள பாரம்பரிய சீனப் புத்தாண்டை முன்னிட்டு சபாநாயகருடன் சிநேகபூர்வ கலந்துரையாடல் இடம்பெற்றதுடன், அதிஷ்டத்தின் அடையாளமாக சீன மக்களினால் கருதப்படும் ட்ரகன் சிலை சபாநாயகருக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

## உத்தியோகபூர்வ ஆடைகளை புறக்கணித்த தாதியர்கள்



இன்று (06) முதல் சாதாரண ஆடைகளை அணிந்து பணிக்கு சமூகமளிக்கத் தீர்மானித்துள்ளதாக அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கத் தலைவர் முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாததைக் கண்டித்து, அவர்கள் தமது உத்தியோகபூர்வ சீருடையை அணிய மறுத்துள்ளார்கள்.

## இறுக்கமாகும் இராணுவ விதிகள்

இராணுவ முகாம்களில் இருந்து துப்பாக்கிகளை வழங்குவதற்கான விதிகளை கடுமையாக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இராணுவ தளங்களில் இருந்து வழங்கப்படும் துப்பாக்கிகள் அவ்வப்போது கையளிக்கப்படுகிறதா? என்பது குறித்து ஆராயப்படவுள்ளது.

கடந்த சில நாட்களாக நாடு முழுவதும் இடம்பெற்ற பல பாதாள உலகச் செயற்பாடுகளில் தீவிர இராணுவப் பொலிஸார் ஈடுபட்டுள்ளதாக தகவல் வெளியாகியிருந்த நிலையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பாதாள உலக செயற்பாடுகளில் ஈடுபடும் இராணுவ வீரர்களுக்கு எதிராக கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

## கைதிகளை வீட்டுக் காவலில் வைக்கும் முறைக்கு ஆலோசனை

இலங்கையில் சிறு குற்ற செயல்களில் ஈடுபட்டவர்களை சிறையில் தடுத்து வைக்காது வீட்டுக்காவலில் வைக்கும் நடைமுறை ஒன்றை அறிமுகம் செய்வதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகளில் நிலவி வரும் கடும் நெரிசல் நிலைமைகளினால் இந்தத் திட்டம் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

சிங்கப்பூர் போன்ற நாடுகளில் சிறு குற்ற செயல்களில் ஈடுபட்ட நபர்களை வீட்டு காவலில் தடுத்து வைக்கும் முறை காணப்படுகின்றது.

வீட்டுக்காவலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் விசேட சிப் அல்லது கைக்கடிகாரம் ஒன்றை அணிந்திருக்க வேண்டும் என்ற நடைமுறை அமுல்படுத்தப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

அவர்கள் வீட்டை விட்டு நெடுந்தூரம் வெளியே உலவுகின்றனரா? என்பது குறித்து கண்டறிந்து கொள்வதற்கு இந்த இலத்திரனியல் சாதனங்கள் உதவும் என தெரிவிக்கப்படுகிறது.

வீட்டை விட்டு நீண்ட தூரம் வெளியே சென்றால் அது குறித்து பொலிஸாருக்கு தகவல் கிடைக்கக்கூடிய வகையில் இந்த வீட்டுக்காவல் நடைமுறை அறிமுகம் செய்யப்படவுள்ளது.

## கெஹலியவின் கோரிக்கைக்கு சிறைச்சாலை அனுமதி



வீட்டிலிருந்து கொண்டு வரும் உணவுகளை பெற்றுக் கொள்ள அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல விடுத்திருந்த கோரிக்கைக்கு வெலிக்கடை சிறைச்சாலை அனுமதி வழங்கியுள்ளது. வெலிக்கடை சிறைச்சாலை வைத்தியசாலையின் வைத்தியர்களின் சிபாரிசுக்கு அமைய அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு இந்த அனுமதி வழங்கப்பட்டதாக சிறைச்சாலை திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. சர்ச்சையை ஏற்படுத்திய தரமற்ற மனித இம்யூனோகுளோபுலின் சம்பவம் தொடர்பில், கைது செய்யப்பட்ட அப்போதைய சுகாதார அமைச்சராக இருந்த கெஹலிய ரம்புக்வெல்லவை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மாளிகா கந்த நீதவான் நீதிமன்றம் அண்மையில் உத்தரவிட்டது.

# இங்கிலாந்து–இந்தியா

# இரண்டாவது டெஸ்ட் சாதனைகள்

விசாகபட்டணத்தில் நடைபெற்ற இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது போட்டியில் இந்தியா 109 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.



நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்தியா முதலில் துடுப்பெடுத்தாடியது. இந்திய அணியின் தொடக்க ஆட்டக்காரரான ஜெய்ஸ்வாலின் 209 ஓட்டங்களுடன், 396 ஓட்டங்கள் சேர்த்தது. இங்கிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 253 ஓட்டங்கள் சேர்த்தது. 143 ஓட்டங்கள் முன்னிலையுடன் இந்தியா இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கியது. சுப்மன் கில்லின் சதத்துடன் (104) 255 ஓட்டங்கள் எடுத்தது. இங்கிலாந்தின் வெற்றிக்கு 398 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது. இங்கிலாந்து அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 292 ஓட்டங்கள் மட்டுமே சேர்த்தது. இந்திய அணி 106 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்தப் போட்டியில் இந்திய அணியின் பும்ரா மொத்தம் 9 விக்கெட்டுகள் கைப்பற்றி அசத்தினார். முதல் இன்னிங்ஸில் விக்கெட் எதுவும் கைப்பற்றாத அஸ்வின் இரண்டாவது இன்னிங்ஸில் மூன்று விக்கெட்டுகள் கைப்பற்றி அசத்தினார். இதன் மூலம் சர்வதேச கிரிக்கெட்டில் அஸ்வின் 499 விக்கெட்டுகள் கைப்பற்றியுள்ளார்.

**ஆட்ட நாயகன் பும்ராவின் மகத்தான சாதனை**

இரண்டாவது டெஸ்ட்டில் பும்ரா 91 ஓட்டங்கள் கொடுத்து 9 விக்கெட்கள் வீழ்த்தி இருந்தார். இது அவரது இரண்டாவது சிறந்த டெஸ்ட் பந்துவீச்சு ஆகும். முன்னதாக அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக 2018 இல் 86 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்கள் வீழ்த்தி இருந்ததே அவரது சிறந்த டெஸ்ட் பந்துவீச்சாகும். இதைத் தவிர்த்து அவர் இந்திய மண்ணில் 9 விக்கெட்கள் வீழ்த்தி வேறு எந்த வேகப் பந்துவீச்சாளரும் செய்யாத சாதனையை செய்து இருக்கிறார்.

பென் ஸ்டோக்ஸ் விக்கெட்டை வீழ்த்தியதன் மூலமாக இந்திய அணியின் நட்சத்திர வீரர் ஜஸ்பிரித் பும்ரா டெஸ்ட் கிரிக்கெட்டில் 150 விக்கெட்டுகளை வீழ்த்தினார். 34 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள பும்ரா, அதிவேகமாக 150 விக்கெட்டுகளை வீழ்த்திய இந்திய வேகப்பந்துவீச்சாளர் என்ற சாதனையை படைத்தார்.

இந்திய பந்துவீச்சாளர்களில் குறைந்த பந்துகளை வீசி 150 விக்கெட்டுகளை வீழ்த்திய வீரர் என்ற சாதனையையும் பும்ரா படைத்துள்ளார்.

**இந்திய மண்ணில் ஜாக் கிராலி தனித்துவ சாதனை**

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியின் இரண்டு இன்னிங்ஸிலும் அரைசதம் அடித்ததன் மூலம், ஜாக் கிராலி 10 ஆண்டுகளில் இரண்டு இன்னிங்ஸிலும் 50 ஓட்டங்களைக் கடந்த மூன்றாவது வெளிநாட்டு வீரரானார். இங்கிலாந்து அணியின் தொடக்க ஆட்டக்காரர் ஜாக் கிராலி முதல் இன்னிங்ஸில் 78 பந்துகளில் 11 பவுண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்களுடன் 76 ஓட்டங்கள் எடுத்தார். இதையடுத்து, இரண்டாவது இன்னிங்ஸில் 132 பந்துகளில் 8 பவுண்டரிகள், 1 சிக்ஸர்களுடன் 73 ஓட்டங்கள் எடுத்தார்.

**இங்கிலாந்துக்கு எதிராக புதிய வரலாறு படைத்த அஸ்வின்**

இந்த டெஸ்ட் போட்டியில் 3 விக்கெட்டுகளை கைப்பற்றியதன் மூலம் சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட்டில் அஸ்வின் 499 விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளார். இன்னும் ஒரு விக்கெட்டை கைப்பற்றினால் அஸ்வின் டெஸ்டில் தன்னுடைய 500 ஆவது விக்கெட்டை கைப்பற்றுவார். இங்கிலாந்து அணிக்கு எதிரான அடுத்த டெஸ்ட் போட்டியில் அஸ்வின் 500 விக்கெட் என்ற மைல்கல்லை அடைவதுடன், டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணிக்கு எதிராக மட்டும் 100 விக்கெட்டை கைப்பற்றிய வீரர் என்ற சாதனையையும் படைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**இந்திய இளம் வீரர்களின் அரிய சாதனை**

முதல் இன்னிங்ஸில் இரட்டைச்சதம் (209) அடித்து ஜெய்ஸ்வால் இந்தியாவைக் காப்பாற்றினார். இரண்டாவது இன்னிங்ஸில் சுப்மன் கில் சதம் (104 ஓட்டங்கள்) எடுத்து இந்தியாவுக்கு ஆறுதலளித்தார்.

22 வயதாகும் ஜெய்ஸ்வால், 24 வயதாகும் கில் ஆகிய இளம் வீரர்கள் இப்போட்டியில் இந்தியாவை தூக்கி நிறுத்தினார்கள். 27 வருடங்கள் கழித்து டெஸ்ட் கிரிக்கெட்டில் ஒரே போட்டியில் 25 வயதுக்கு உட்பட்ட இரண்டு இந்திய வீரர்கள் சதமடிக்கும் அரிதான நிகழ்வு இப்போட்டியில் நடந்துள்ளது.

**சாதனைகளுடன் இரட்டைச் சதம் அடித்த ஜெய்ஸ்வால்**

சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட்டில் யஷஸ்வி ஜெய்ஸ்வால் அடிக்கும் முதல் இரட்டை சதம் இதுவாகும். இதன் மூலமாக டெஸ்ட் கிரிக்கெட்டில் இரட்டைச்சதம் விளாசும் 25 ஆவது இந்திய வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார். அதேபோல் இந்திய அணிக்காக இரட்டை சதம் விளாசிய 4 ஆவது இடது கை வீரர் என்ற சாதனையையும் படைத்துள்ளார். சிறப்பாக ஆடிய ஜெய்ஸ்வால் 290 பந்துகளில் 7 சிக்ஸர், 19 பவுண்டரி உட்பட 209 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் ஒரு போட்டியின் ஒரு இன்னிங்ஸில் மற்ற வீரர்கள் 50 ஓட்டங்கள் அடிக்காத போது இரட்டைச்சதமடித்த முதல் இந்திய வீரர் என்ற மாபெரும் சாதனையை ஜெய்ஸ்வால் படைத்துள்ளார்.








இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 06.02.2024 அன்று வெளியிடப்பட்டது.